https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-3 July 2025

Published on 14, July-2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# எட்டுத்தொகை அகநூல்களில் யாழ்-அழகியல் பார்வை

**முனைவர் க. ச. பவானி**
**முனைவர் அ. கலைவாணி**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்
கோயம்புத்தூர்

## முன்னுரை

*மனித வாழ்க்கையை மாண்புறச் செய்யும் ஆற்றலே கலைகளாகும். இயற்கை, கலை என்ற இரு கண்ணோட்டத்தில் நோக்கும் போது இயல்பாகத் தோன்றியது இயற்கை, உருவாக்கப்பட்டது கலை ஆகும். இக்கலையின் ஒரு பகுதியாக விளங்குவது இசைக்கலை ஆகும். இசை என்பது இசைப்பவரையும் கேட்பவரையும் இசைய வைப்பது. சங்க காலத்தில் வாழ்ந்த மக்கள் இசைக் கருவிகளை தோற்கருவி, துளைக்கருவி, நரம்பு கருவி, மிடற்றுக் கருவி என்று வகைப்படுத்தியுள்ளனர். இவற்றில் நரம்பினால் வாசிக்கப்படும் யாழே தமிழர் வாசித்த முதல் இசைக்கருவி. நரம்பினால் செய்யப்பட்ட இசைக்கருவிகளில் யாழே முதன்மை இடத்தையும் பெற்றுள்ளது. யாழ் இன்று முற்றிலுமாக மறைந்து அதன் பரிணாமமான வீணை இன்று முதன்மை பெற்றுள்ளது. சங்க இலக்கியங்களை எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்று சங்க காலப் புலவர்கள் வகைப்படுத்தியுள்ளனர். இவ்இரண்டிலும் யாழ் பற்றிய பல செய்திகள் இடம்பெறுகின்றன. யாழைப் பற்றிய விரிவான தகவல்கள் இருப்பதை பார்க்கும் பொழுது சங்க காலத்துக்கு முன்னரே யாழ் இசைக்கருவி தோன்றியிருக்கும் என்று கொள்ளலாம். சங்க கால மக்கள் இசையோடு பிண்ணிப் பிணைந்து வாழ்ந்து இருந்தனர். அவர்களின் வாழ்க்கையில் யாழ் பல நிலைகளில் முக்கியப்பங்கு வகித்தது என்பதை எட்டுத்தொகை அகநூல்களில் வழி அழகியல் உணர்வோடு இவ்வாய்வில் காணலாம்.*

**திறவுச் சொற்கள்**

*குழல், புத்துணர்வு, அழகியல், தொன்மை, சூழல், வனப்பு*

## அழகியல்

*அழகுணர்ச்சி என்பது உள்ளத்தால் உணரப்படுவது. ஒரு பொருளைப் பற்றிய எண்ணங்கள் கற்பனைகள் இவற்றால் உருவாக்கப்படுவது அழகியல். அழகியல்* Aesthetics *அல்லது* Esthetics *என்பது அழகின் தன்மையை ஆராய்வது கலை படைப்புகளில் அழகை இனம் கண்டு ரசிப்பதும் மகிழ்வதும் சுவையுடன் படைப்புகளை படைப்பதும் பற்றிய இயலாகும். அழகியல் வரையறையானது தமிழில் இருந்து தான் தொடங்குகின்றது அதன் மூலாதாரங்களும் கருத்தியல்களும் கணிசமாகவும் கவனிக்கத் தக்கனமாகவும் இருக்கின்றன. மேலும் வெவ்வேறு பண்பாட்டுச் சூழல் அமைப்புகளில் சமூக வரலாற்று நிலைகளில் தனிச்சிறப்பிலான கூறுகளுடன் அழகியல் புலப்பட்டு நிற்கும் என்பதால் அவ்வப் பண்பாடுகளையும் கலை இலக்கியங்களையும் சார்ந்த அழகியலைப் புரிந்து கொள்ள வேண்டும்.*

அழகு என்பது அவரவர்களின் பார்வையின் வெளிப்பாடு எனலாம். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு அழகுணர்வு தோன்றும். ஆனால் செய்யுள்களில் உள்ள அழகை வெளிப் படுத்தும் புலவர்கள் தங்களது கற்பனை திறனை காட்டி வெளிப்படுத்தி உள்ளனர். ஒவ்வொரு பாடலிலும் இயல்பாக உள்ள செய்தியை தனது அழகுணர்வை சேர்த்து அழகான பாடல்களாக வெளிக்காட்டில் உள்ளனர். இயல்பாக இருக்கும் ஒரு பொருள் புலவரின் கற்பனைக்கு ஏற்றார் போல் மாற்றும் பொழுது அது சிறப்பான அழகுடைய பாடலாக மாறுகின்றது. இந்த அழகியல் என்பது புலவர்களின்உணர்வு வெளிப்பாட்டு தன்மையை கூறலாம். ஒவ்வொரு புலவர்களும் தங்களது உணர்வின் வெளிப்பாட்டை பாடல்களில் வெளிக்காட்டி உள்ளனர்

அழகு என்பதற்கு வாழ்வியற் களஞ்சியம் உலகப் பொருள்கள் இடையே காணப்படும் ஒத்தத்தன்மை, இணைக்க அமைப்பு, முரண், ஒழுங்கு, சுருமை, தோய்வு, மோனம் என்பவற்றால் ஏற்படுவதாய உயிரால் உணரப்படும் சிறந்த தெய்வீக பொருள் என்று பொருள் தருகின்றது. **(வரலாற்று வாழ்வியல் களஞ்சியம் பக்க எண். 203)**

அழகியல் பற்றி தமிழ் அகராதி முருகியல் அல்லது அழகைப் பற்றிய கொள்கை என்று பொருள் தருகிறது. **(தமிழ் அகராதி ப.எண் 70)**

அகமும் புறமும் ஒன்றும் போது அழகுணர்வு புலனாகும். இவற்றை உரைத்திடும் சங்க இலக்கியத்தில் அதிகமாக வாங்கும் சொற்கள் அழகு என்ற சொல்லுக்கு பதிலாக கவின், வனப்பு, நலம், எழில் ஆகியவை மற்றும் திரு, அணி, ஏர் ஆகியவை குறிக்கப்படுகின்றன. **(தமிழ் அழகியல் மரபும் கோட்பாடும்)**

## இசை அழகியல்

அழகியலில் இசை என்பது ஒரு வகை இல்லை அவை ஒரு தத்துவம் இசையின் அனைத்து வகைகளுக்கு அழகியல் உரித்தா னது. இசையின் அனைத்து வகைகளும் அழகாக இருக்கும் இருப்பினும் பிரபலமான இசை பலரைக் கவரும் அழகியலைக் கொண்டு உள்ளது. ஒவ்வொரு இசையும் ஒரு குறிப்பிட்ட அழகினை உருவாக்கக் கூடியதாக உள்ளது. இசையில் அழகியல் என்பது ஒரு குறிப்பிட்ட இசையினை கேட்கும் போது எழும் அழகு மற்றும் உணர்ச்சி என வரையறுக்கப்படுகின்றது. ஒரு பாடல் ஒலிக்கும் போது உணரப்படும் உணர்ச்சி அதன் குறியீட்டு பிரதிநிதித்துவம் மற்றும் ஒலி ஆகியவை ஒரு அழகியலின் பகுதியாக உள்ளது. இசையில் ஒரு அழகியல் என்பது ஒரு குறிப்பிட்ட உணர்ச்சியை தூண்டுவதற்கு ஒத்த நுட்பங்கள் பயன் படுத்தப்படுகின்றனர். இசை கண்களுக்கும் காதுகளுக்கும் அழகு மற்றும் சுவை மற்றும் அதன் உணர்வுகளை அழகியல் நுட்பத்துடன் ஏற்படுத்துகின்றன. இசை என்பது கலையின் தன்மை அழகு பாராட்டுதல் போன்றவற்றை கையாளும் தலங்களாகும்.

## யாழின் தொன்மை

அகத்திணையில் உள்ள முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருள்களில் மனிதனின் வாழ்வோடு பின்னிப்பிணைந்த கருப்பொருள் பற்றித் தொல்காப்பியர்

**தெய்வம் உணவே மாமரம் புட்பறை**
**செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ**
**அவ்வகை பிறவும் கருவென மொழிப**
(தொல்.அகம் .நூற்.30)

என்னும் நூற்பாவில் பறை, யாழ் என்னும் இருவகை இசைக்கருவிகளை கருப்பொருளில் சுட்டிக்காட்டி உள்ளார். யாழின் தொன்மை க்கு சிறப்பான சான்று எனலாம்.

மெசபத்தாமிய நாட்டிலுள்ள 'ஊர்' நகரம் இருந்த இடத்தில் அகழ்வாராய்ச்சியின் போது கண்டெடுக்கப்பட்ட யாழ்கருவி, பாக்தாத் நகரில் வைக்கப்பட்டுள்ளது. ஏறக்குறைய 5000 ஆண்டுகளுக்கு முற்பட்ட சிந்து வெளி நாகரிக ஆராய்ச்சியின் கண்டெடுக்கப்பட்ட பல முத்திரைகளில் தமிழ் மக்கள் வழக்கிலிருந்த யாழும் குழலும் காணப்படுகின்றன எனப் புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் அறிவித்துள்ளனர். இன்றைக்கு 3500 ஆண்டுகளுக்கு முன்பிறந்த எகிப்திய யாழ்களில் சில பிரிட்டன் காட்சி சாலையில் வைக்கப்பட்டுள்ளது என்று யாழின் தொன்மை பற்றி குறிப்பிடப் பட்டுள்ளதாக து. ஆ. தனபாண்டியன் கூறியுள்ளார். **(து.ஆ.தனபாண்டியன். இசைத் தமிழ் வரலாறு பகுதி ஒன்று ப.296)**

குழல் ஓசையையும் யாழின் ஓசையையும் வள்ளுவர் குழந்தையின் மழலையின் மொழிக்கு இணையாக கூறுகின்றார்.

**குழலினிது யாழினிது என்பர் தம்மக்கள்**
**மழலை சொல் கேளாதவர்** (குறள். 66)
**கணைகொடியது யாழ்கோடு செவ்விது**
**ஆங்அன்ன**
**வினைபடு பாலால் கொளல்** (குறள். 279)

என்னும் குறட்பாவில் வள்ளுவர் நேரான அன்பு கொடுமை செய்யவல்லது யாழ் என்னும் இசைக்கருவியோ நேரானது இல்லை என்றாலும் செம்மையான இசை தர வல்லது அதுபோல செயலின் பயன்

கருதி ஏற்க வேண்டும் என்பதில் யாழினை வள்ளுவர் உரைப்பதின் மூலம் யாழின் தன்மையும் தொன்மையும் அறியலாம்.

### யாழின் வகைகள்

தமிழகத்தில் பல்வேறு யாழ்கள் வழக்கிலிருந்து இருக்கின்றன. பேரியாழ், நாரதயாழ், தும்புருயாழ், கீசகயாழ், மருத்துவ யாழ், எனும் தேவயாழ், சகோடயாழ், செங்கோட்டு யாழ், மகரயாழ், சீறியாழ், பேரியாழ் என்பன குறிப்பிடத்தக்கன. சங்க இலக்கியத்தில் வில்யாழ், சீறியாழ், பேரியாழ் என்னும் மூவகை யாழ்களை அதிகமாக காண முடிகின்றது.

### நற்றிணையில் யாழ்

தொகை நூல்களில் முதலாவதாக வைத்துப் போற்றப்படுவது நற்றிணை. இந் நூலில் யாழ் பற்றிய செய்திகள் பல இடம்பெறுகின்றன. வேனிற் காலத்தில் மாறி மாறி தன் நிறம் வேறுபடுகின்ற ஓணான் வயது மூப்பின் காரணமாக யாமரத்தின் மீது ஏற இயலாது வருத்தம் கொண்டு சோர்ந்து நிற்கிறது. அப்போது அவ்வழியில் சென்ற பாணர் தான் நடக்கும் வருத்தமும் சோம்பலும் தீர சிறிது நேரம் அந்த இடத்தில் யாழ் இசைக்கிறார்கள். அவ் இசையை கேட்ட ஓணான் தன் வருத்தம் தீர்ந்து யாழின் ஒளி இனிமையை கேட்டு அந்த மரத்தின் மீது ஏறும் செயலை தொடர்ந்தது. இதில் யாழின் இசையில் மூழ்கிய ஓணான் தான் புத்துணர்வு பெற்று மேலே ஏறுவதாக அழகியல் உணர்வோடு காட்டப்பட்டுள்ளது.

வேனில் ஓதி நிறம் பெயர் முதுபோத்து,
பாலை யாழ் கடைய, வாங்கி,பாங்கர்
நெடுநிலையாலும் ஏறும் தொழில
(நற்.186:5-7)

என்னும் அடிகளால் புலப்படுகின்றன. தலைவனின் மலைச் சிறப்பை கூறும் இடத்தில் தலைவியை காந்தளின் தேனை உண்ட நீல மணி போன்ற நிறத்தை உடைய வண்டு யாழின் நரம்பை போல ஒலிக்கின்ற வானோங்கிய மலைக்கு தலைவன் என்று கூறும் இடத்தில் வண்டின் ரீங்காரத்தை தலைவி யாழின் இசையோடு ஒப்புமைப் படுத்துவது இயற்கை நிகழ்விற்கு யாழின் இசையை கூறுவது அழகியலின் வெளிப்பாடு எனலாம். இதனை

…………………..சாரல்
காந்தள் ஊதிய மணி நிறத்தும்பி
தீம் தொடை நரம்பின் இடமிரும்
வான் தோய் வெற்பன்; மார்பு அணங்கு
எனவே (நற்.17:9-12)

என்ற பாடலடியில் உணரலாம். இயற்கையாகப் பொழியும் மழையின் ஓசையுடன் நிலைபெற்ற நல்ல யாழின் முறுக்கிய நரம்பில் ‘படுமலை’என்ற பண்ணினை எழுப்பியது போன்று மழையின் ஒலி எழும்புவதாக மழையின் அழகை யாழின் அழகிய இசையினை காட்டிச் சுட்டுகின்றார். இதனை,

படுமலை நின்ற நல்யாழ் வடிநரம்பு
எழீஇயன்ன உரையினை முழவின
மண் ஆர் கண்ணின் இம்மென இமிரும்
(நற்.139:4-6)

என்ற பாடல் அடியில் உணரலாம்.

### ஐங்குறுநூற்றில் யாழ்

தொகை நூல்களில் மூன்றாவதாக வைத்து போற்றப்படும் ஐங்குறுநூற்றில் யாழின் இசைத்தன்மையின் அழகியல் உணர்வோடு பல இடங்களில் ஒப்புமைப்படுத்தி கூறியுள்ளனர். மாலைப்பொழுதில் மனைவி, மகனுடன் தலைவன் கட்டிலில் படுத்து இருக்க தன் மகன் மார்பில் ஏறி ஊர்தலில் ஏற்படும் மகிழ்ச்சியானது பாணன் பண்ணை யாழில் இசைக்கும் போது ஏற்படும் இசையில் உள்ளம் இன்பம் அடைவதைப் போன்று தலைவனின் உள்ளம் இன்பம் அடைவதாக அழகியல் உணர்வோடு காட்டுகின்றார். இதனை,

மாலை முன்றில் குறுங்களி கட்டில்
மனையோள் துணைவி புதல்வனாக
மார்பில் ஊரும் மகிழ்நகை இன்பப்
பொழுதிற்கு ஒத்தன்று மன்னே
மென் பிணித்து அம்ம - பாணனது யாழே
(ஐங்குறு.பா:410)

என்ற பாடல் அடியில் குடும்ப உணர்வோடு இசை உணர்வையும் ஊட்டுவது ஓர் அழகியலே ஆகும்.

தலைவியின் அழகினையும் அவளின் சொற்களின் தன்மையினையும் தலைவன் அழகியல் உணர்வோடு ஒப்புமை படுத்துகின்றான். தலைவியின் இதழ்கள் நெய்தல் பூக்களாலும் பற்கள் முத்துப் போலவும் பவளம் போன்ற சிவந்த வாயினையும் யாழின் இசை போன்ற இனிய சொற்களையும் உடையவள் என்று கூறுகின்றான்.

அலங்கு இதழ் நெய்தற் கொற்கை முன்துறை
இலங்கு முத்து உறைக்கும் எயிறு கெழு
துவர்வாய்
ஆரம் போல் அவ்வளைக் குறுமகள்
நரம்பு ஆர்த்தன்ன தீங் கிளவி யவளே

(ஐங்குறு.பா.185)

என்ற பாடல் அடியின் மூலம் அறியலாம். இதே போன்று தலைவியின் சொற்களின் ஓசை தன்மையினை யாழின் ஒலியோடு அழகாக கூறுகிறார். தலைவன் திருத்தமாகச் செய்யப்பட்ட யாழ் நரம்பினின்று எழுகின்ற இன்னிசைப் போன்று இனிய மொழிகளைக் கூறி, வட்டமான முலைக்கண்ணில் வடு உண்டாக நம்மைத் தழுவினாள் என்பதை,

**தொடிக்கண் வடுகொள – முயங்கினள்**
**வடிப்பு உறு நரம்பின் தீவிய மொழிந்தே**
(அகம்.142:25-26)

என்ற பாடலடியில் அறியலாம்.

### கலித்தொகையில் யாழ்

கற்றறிந்தோர் ஏத்தும் கலி என கலித்தொகையின் சிறப்பினை கூறுவர். எட்டுத்தொகை நூல்களுள் பாடல்களில் சிதைவும் குறைவும் இன்றி முழுமையாக இன்றளவும் திகழ்வன கலித்தொகை ஆகும். இந்நூலில் பாணர்கள் யாழினை இசை கருவியாக மட்டும் எண்ணாமல் அதனை தெய்வமாக நினைத்து வழிபட்டு மரியாதை செலுத்தியுள்ளனர். இதனை

**.....................யாழொடும்**
**எடுத்து சூள் பல உற்ற பாணன்**
**வந்தீயான்கொல்** (கலித்.71:13-14)

என்ற பாடல் அடியின் மூலம் அறியலாம்.

பாலைக்கலி பாடல் ஒன்றில் தலைமகன் பிரிவேன் என்று கூற அதற்கு தோழி தலைவியின் நிலையினை எடுத்துக்கூறி தலைவன் பொருள் தேடச் செல்லாது தலைவியுடன் தங்குதலை பரி கோலாற் குத்தவும் தன்னெறியின் நில்லாத ஆண் யானை மெல்லிய யாழ் ஓசையினை கேட்டவுடன் தன் நிலை மறந்து நின்றது போல தலைவன் இருந்தனன் என்று யாழின் ஓசைக்கு யானை மயங்கியதைப் போன்று தலைவன் நின்றான் என்று அழகியல் உணர்வு வெளிப்படுகிறது.

**அன்பு அன்று என்று யான் கூற அன்புற்று**
**கால் வரை நில்லா கடுங்களிற்று ஒருத்தல்**
**யாழ்வரை தங்கியாங்கு தாழ்வு நின்**
(கலித்.2:25-27)

தலைமகன் பிரிவினை ஆற்றாத தலைமகள் புலம்பும் போது யாழ் இசை கேட்டு இன்புறும் அசணமாவை அவ்வின்பத்தில் தொடர விடாமல் பறை ஒலி அடித்து அதன் உயிர் போக தட்டினார் போல தலைவன் முன்னர் வஞ்சித்து இன்பத்தை தந்து பின்னர் அவ்வின்பம் போகும் படி கைவிட்டான் என்று யாழ் இசையை கூறுகிறாள். விலங்குகளும் யாழ் இசைக்கு இன்புற்றன அழகியலே ஆகும். என்பதை,

**மறையின் தன் யாழ் கேட்ட மானை**
**அருளாது**
**அறை கொன்று மற்று அதன் ஆர் உயிர்**
**வஞ்ச,**
**பறை அறைந்தாங்கு, ஒருவன் நீத்தான்**
(கலித்.143:10-12)

என்ற வரிகளால் உணரலாம்.

தலைவனின் வரவுணர்ந்து தோழி தலைவியை ஆற்றுவிக்கும் பாடல் ஒன்றில் தலைவன் பிரிந்த நாட்கள் பல கடந்த அவன் உடன் இல்லாத நிலையை யாழின் இனிய இசை அங்கங்கே நிறுத்தி அவை கேட்கும் குழலின் இசை போல வண்டுகள் ஒலியோடு இணைந்து தும்பிகளும் தாது ஊதிப்பறக்கின் றன இவ்வோசை தனக்கு வருத்தம் அளிப்பதாக தலைவி கவலையுறுகிறாள்.

**நரம்பின் தீம் குரல் நிறுக்கும் குழல் போல்**
**இரங்கு இசை மிஞிறொடு தும்பித் தாது**
**ஊத** (கலித்.33:22-23)

இவ்வரிகளின் மூலம் சங்க இலக்கியத்தில் யாழின் பயன்பாடு இருந்தது அதன் இனிய ஓசையை கேட்டுள்ளனர் என்பதை தெளிவாக அறியலாம்.

### அகநானூற்றில் யாழ்

அகநானூற்றின் நானூறு கலை, வரலாறு, பண்பாடு ஆகிய பல்துறை கருவூலங்கள் ஆகும். அகத்துறை சார்ந்த பல செய்திகளை உள்ளடக்கியுள்ளது. இந்நூல் யாழின் இசையினைப் பற்றி பல இடங்களில் கூறியுள்ளது. அவற்றில் பொருள் வயிற் காரணமாக தலைவனைப் பிரிந்த தலைவி பாணனிடம் தலைவன் வருகை குறித்து வினவ அதற்கு பதில் கூற இயலாதவனாய் பாணன் இறைவனின் அருள் வேண்டி யாழில் நல்ல செவ்வழிப் பண்ணை மெல்லென இசைத்து தலைவியைக் காக்க வேண்டி கடவுளை வாழ்த்தினேன் என்று தலைவியின் துயரினை தலைவனிடம் உரைக்கலானான். இவ்விடத்தில் தலைவியின் கவலையை யாழ் மூலம் போக்க இறைவனை வேண்டியதாகக் கூறும் செய்தி ஓர் அழகியல் நிகழ்வாகும்.

**மனையோள் சொல் எதிர் சொல்லல்**
**செல்லேன்**
**செவ்வழி நல் யாழ் இசையினென்**
**பையென**
**கடவுள் வாழ்த்தி பையுள் மெய்ந்நிறுத்து**
**அவர் திறம் செல்வேன் கண்டனென்**
(அகம்.14:14-17)

என்ற என்ற வரிகளில் அறியலாம்.

குறிஞ்சி நில வருணனையில் உள்ள பாடல் ஒன்றில் மலைப்பகுதியில் இரவுக்குறி தலைவன் வந்து செல்கிறான். அவன் செல்லும் அப்பாதையில் விலங்குகள் அதிகம் நடமாடும் என்று கூறி கரிய சிறகினையு டைய வண்டின் கூட்டம் ஒலி எழுப்பும் அவ்வொலியினை யாழின் இசை என கருதி, பெரிய மலைப் பிளவுகளில் உள்ள அசுணங்கள் அவ்விசையை உற்றுக் கேட்கும் என்று யாழின் இசை போன்று இனிமை யான வண்டுகள் ஒலி எழுப்புகின்றன என யாழின் ஓசையைச் சுட்டிக்காட்டி விலங்கு களும் யாழின் ஒலிக்கு மயங்கும் என்று அழகியல் பார்வையில் கூறுகிறார்.

**இருஞ் சிறைத் தொழுதி ஆர்ப்ப யாழ் செத்து,**
**இருங்கல் விடர் அளை அசுணம் ஓர்க்கும்**
*(அகம்.88-11-12)*

என்ற பாடல் அடியின் மூலம் அறியலாம்.

களவு காலத்தில் தலைவி தலைவனை காண வந்து தலைவன் இல்லாமல் தலைவியும் தோழியும் சென்று விடுகின்றனர.; அவ்வாறு தலைவி வந்து சென்றதை அறிந்த தலைமகன் தலைவியின் அழகினை தன் நெஞ்சிடத்தில் கூறுவதாக பரணர் எழுதிய பாடலில் தலைவியின் இனிய சொல்லிற்கு யாழினை மீட்ட தெரிந்தவன் அதன் நரம்புகளை தடவி எழுப்பும் நல்ல யாழின் செவ்வழிப் பண்ணின் இசையைக் கேட்டார் போன்று மிகவும் இனிய சொற்களை உடையவள் என் தலைவி என்று நெஞ்சுக்கு அழகு உணர்வோடு தலைவியின் குரலை கூறுகிறான்.

**நயவன் தைவரும் செவ்வழி யாழ்**
**இசை ஓர்த் தன்ன அன்ன இன்தீம் கிழவி**
*(அகம்.212-6-7)*

என்ற வரிகளில் அறியலாம்.

குயில், கணத்துள் எனும் இரு பறவைகளின் ஒலிகளுக்கு யாழ் ஒலியினை ஒப்புமையாக பேசப்பட்டுள்ளது புயல் ஒலிப்பதை,

**விளரி நரம்பின் நயவரு சீறியாழ்**
**மலிபூம் பொங்கர் மகிழ்குரற் குயிலொடு**
*(அகம்.279-12-12)*

இவ்வடிகள் விளக்குகின்றன.

சங்க காலத்தில் ஊர்களில் உள்ள தெருக்கள்தோறும் யாழ் இசையின் முழக்கம் ஒலித்திருக்கின்றன. இதனை சங்கப்பாக்கள் எடுத்தியம்புகின்றன. ஆஅய் எயினன் எனும் மன்னன் யாழிசை முழங்கும் தெருக்களை உடைய பாழி என்ற நகரில் இருந்து சூளுரைத்தலானான் என்னும் செய்தியின் பின்வரும் அடிகள் விளக்குகின்றன.

**பொலம் பூண் நன்னன் புனனாடு கடிந்தென்**
**யாழ் இசை மருகின் பாழி ஆங்கண்**
*(அகம்.395-3-4)*

எனவே பொது மன்றங்களில் மட்டுமின்றி தெருக்களிலும் யாழ் மொழியால் நிறைந்திருந்தன என்பது புலனாகின்றது.

## தொகுப்புரை

கலைகள் மக்களின் பொழுதுபோக்கிற்காக உருவாக்கப்பட்டு வாழ்வின் ஒரு கூறாக அமைந்துள்ளது. சிலப்பதிகாரமும் கலை என்னும் சொல்லை பல்வேறு பொருண்மை களுடன் ஆடற்கலை, இசைக்கலை என்னும் பொருண்மைகளுடனும் பதிவு செய்துள்ளது. இசைக்கலையின் பாகுபாடுகளும் அடிப்படை கூறுகளான சுரங்களும் கூறப்பட்டுள்ளன. சங்க காலத்தில் ராகங்களைப் பண்கள், பாலைகள், யாழ்கள் என குறிப்பிடப் படுகின்றன. தமிழ் நிலத்தின் தொன்மையான யாழிலிருந்தே வட புலத்தில் வீணை தோற்றம் பெற்று இருக்கின்றன. இத்தகைய சிறப்புப் பொருந்திய யாழினை எட்டுத் தொகை அக நூல்களில் பயன்படுத்திய தன்மையை அழகியல் பார்வையோடு இவ்வாய்வு விளக்குவதாக அமைகின்றது.

## துணைநூற்பட்டியல்

1. தனபாண்டியன். து. ஆ., இசைத்தமிழ் வரலாறு பகுதி ஒன்று, தமிழ் பல்கலைக் கழகம், தஞ்சாவூர். 1994.
2. இளம்பூரணர், தொல்காப்பியம், கழக வெளியீடு, சென்னை. 2001
3. புலியூர்க்கேசிகன், திருக்குறள், தென்றல் நிலையம், சென்னை. 2009
4. ……வாழ்வியல் களஞ்சியம், தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். 1984
5. சுப்பிரமணியம் சா.வே, தமிழ் அகராதி, மாணிக்கவாசகர் பதிப்பகம் சென்னை. 2001
6. நடராஜன் தி.சு, தமிழ் அழகியல் மரபுக் கோட்பாடும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
7. சோமசுந்தரனார்.பொ.வே, ஐங்குறுநூறு, கழக வெளியீடு, சென்னை. 2009
8. செயபால் இரா, அகநானூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை. 2007
9. அலிஸ் அ, நற்றினை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை. 2012
10. சோமசுந்தரனார்.பொ.வே, கலித்தொகை, கழக வெளியீடு, சென்னை. 2009